Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.265 /2019 Date:17.07.2026
Deposition of witness for prosecution: PW5 ( LW12)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | இத்ரீஷ்கான் | Village | உத்தமபாளையம் |
| Father/ Husband Name | அப்துல் சமது | Taluk | உத்தமபாளையம் |
| Age | 47 /2026 | Calling | சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 17.07.2026. TIME 12.30 **PM**

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பில் முதல் விசாரணை :–**

நான் தற்போது உத்தமபாளையம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.03.2018 ம் தேதி உத்தமபாளையம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் பணியில் இருந்தபோது 11.20 மணிக்கு நிலையப் பொறுப்பிலிருந்தபோது உத்தமபாளையம் முகமது உசேன் மகன் முகமது அப்துல் காதர் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரை பார்வையிட்டு புகாரின் தன்மைக்கேற்ப எதிரி மீது இ.த.ச. பிரிவு 304(A) கீழ் குற்ற எண் 113/18 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். பின்னர் அசல் ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். வழக்கு கோப்பை விசாரணைக்காக அவரது பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3**, குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

சம்பவம் குறித்து மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைக்கப்பெற்றதா என்றால் இல்லை. மருத்துமவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை இந்த வழக்கு ஆவணங்களில் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் நிலையத்தில் ஆஜராகி புகார் அளித்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. பொய் புகாரை பெற்று எதிரி மீது தவறான வழக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.
Sd. P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.